ஊடக அறிவித்தல் இல. - 29

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### அரசியல் வானலைப் பரப்புரைகளுக்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகளை வழங்குதல்

1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கு அமைவாக பெயர்குறித்த நியமனப் பத்திரமொன்றைக் கையளித்துள்ள ஒவ்வோர் அரசியல் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அரசியல் வானலைப் பரப்புரைகளுக்கான வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

02. இந்த வானலை காலத்தைக் குறித்தொதுக்குவதற்கான திருவுளச் சீட்டிழுப்பை 2020.06.20 ஆந் திகதி மு.ப. 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை கொழும்பு 07, பேராசிரியர் ஸ்ரென்லி விஜேசுந்தர மாவத்தையில் அமைந்துள்ள மேல்மாகாண அழகியற் கலையரங்கத்தில் (Western Province Aesthetic Resort) நடாத்துவதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடனும், இலங்கை ரூபவாஹினீ கூட்டுத்தாபனத்துடனும் இணைந்து தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கின்றது.

03. 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கான செல்லுபடியான பெயர்குறித்த நியமனப்பத்திரத்தைக் கையளித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்களும் (அல்லது எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளும்) சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களும் (அல்லது எழுத்திலான அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளும்) இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.06.18

8/-